திரிசிரபுரம்
மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
நூற்றாண்டு விழா

★ திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில்

★ 1976 மார்ச்சு 3, 4, 5, 6, 7 நாட்களில்

★ பிள்ளையவர்களின்

★ நூற்றாண்டு விழாவில்

★ புலவர் பெருமக்கள் செய்த அஞ்சலி

அன்பளிப்பு :

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்
மேலரண்சாலை
திருச்சிராப்பள்ளி - 620 008.

உ

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில்

1976-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3, 4, 5, 6, 7 தேதிகளில்

திரிசிரபுரம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின்

நூற்றாண்டு விழாவில்

புலவர் பெருமக்கள் செய்த அஞ்சலி

திருமுறைக்கலைஞர்
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
20, கீழவீதி,
மலைக்கோட்டை, திருச்சி-2.

சீராரும் துறைசை மகாவித்வச் சீராளா!
பேராரும் மீனாட்சி சுந்தரப் பாவலா!
பொன்போலும் நின்சீர் மனத்திலே உன்னிநான்
நின்னடி யேவாழ்த்து வேன்.

புலவர் த. கி. குப்புசாமி ஆழ்வார்
C-89, 10-A, வடமேற்கு விரிவு,
தில்லைநகர், திருச்சி-18.

இக்காலக் கம்பன் எழில்மிகுமா வித்துவான்
தக்கோர் பரவத் தமிழ்வளர்த்தோன் – எக்காலும்
தேனார் தமிழ்மலரால் செப்பற் குறுபுகழோன்
மீனாட்சி சுந்தரனும் வேள்.

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ், M.A.
1, பிரிட்டோ காலனி,
திருச்சி-2.

நன்னூல்கள் ஓதுதலும் நாற்பயன்கள் நாடுதலும்
பன்னூல்கள் போற்றிப் பயிற்றுதலும் – எந்நாளும்
மெய்த்தவமாய் மேற்கொண்ட மீனாட்சி சுந்தரனார்
பைத்தமலர்ச் சேவடிக்கென் பா.

கலைவாணன் அப்புலிங்கம்

சேக்கிழார் இல்லம்,
திருவானைக்கோயில், திருச்சி-5.

தொட்டவிட மெல்லாம் சுவையூறக் கற்பனைத்தேன்
சொட்டவிட வல்ல சுடர்க்கவிக்கோன் - கட்டறுக்கும்
மந்திரமாச் செஞ்சொல் வளங்குலவு மீனாட்சி
சுந்தரமால் செந்தமிழ்க்கோர் சொத்து.

அயிலை தமிழ்ச்செழியன்

அலுவலர், அமராவதி அங்காடி,
திருச்சி-2.

தண்ணார்ந்த பாட்டைத் தலந்தோறும் பாடியதில்
விண்ணார்ந்த பேர்பெற்ற வேளாளன் - கண்ணான
மீனாட்சி சுந்தரனை மேருமலை ஒத்தவனை
வானாட்சி பெற்றவனை வாழ்த்து.

புலவர் க. கோபண்ணன்

64, நடுத்தெரு,
வரகனேரி, திருச்சி-8.

செந்தமிழாம் அன்னையினைச் சிம்மா சனமேற்றி
முந்திக் கவிவளர்த்த மீனாட்சி - சுந்தரனார்
பாத மலருக்கிப் பாமலரைச் சூட்டுகின்றேன்
நாதன் திருவடியென் நா.

புலவர் சி. சிவக்கொழுந்து

137, பெரியகம்மாளத்தெரு,
திருச்சி-8.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்எனும் - நற்குறட்குக்
காவியமாய் காட்சிதரும் மீனாட்சி சுந்தரமே!
ஓவியமாய் நெஞ்சில் ஒளிர்.

சா. பெரியசாமி

அமைச்சர், தமிழ்ச்சங்கம்,
திருச்சி-8.

பாட்டால் எழுத்தால் பழகவரும் நற்பண்பால்
நாட்டைக் கவர்ச்சித்த நாயகனும் - வாட்டமிலா
மேதையர்க்கு மேதையெனும் மீனாட்சி சுந்தரனின்
பாதையினைப் பற்றுகவிப் பார்.

புலவர் வி. அ. பரிமேலழகர் — புனிதவளனுர் கல்லூரி உயர்பள்ளி, திருச்சி-2.

மீனுட்சி சுந்தரனின் மெய்ப்பனுவல் மண்ணுலகில்
கோனுட்சி செய்தனவே கோமானே – வானோர்க்குச்
செந்தமிழ்ப் பாவின் திறமுரைக்கச் சென்றனையோ
எந்தையே வாழ்கநின் பா.

புலவர் ப. அரங்கசாமி — 12, புதுத்தெரு, இலால்குடி.

தெய்வத் தமிழாய்ந்து தேர்ந்த புலமார்ந்து
சைவ நெறிதோய்ந்த சான்றோயே! – மெய்விதிர்க்கும்
பாக்கள் படைத்தநின் பாதம் தலையேற்றுப்
பூக்கள் படைத்தேன் புகழ்ந்து.

S. இராமச்சந்திரன், பி. ஓ. எல். — 94, நங்கவரம் ஸ்டோர், திருச்சி-2.

கல்விக் கடலாய் கலைபயில் நல்லோரின்
நல்லா சிரியனுய் நானிலத்தில் – நல்லோய்,நீ
எல்லாப் பரிசுடனே சுந்தரப்பேர் தாங்கிமிகு
வல்லோனுய் வாழ்ந்தாய் நனி.

சண்முக. தாயுமானவன் — 87, மலையடிவாரம், பொன்மலை, திருச்சி-4.

வான்புகழ் சாமிநாத வள்ளலுக்கு ஞானகுரு!
ஆன மகாவித்வ ஆசானை – நானிலத்தில்
பக்தி நெறிவளர்த்துப் பைந்தமிழைக் காத்தவனை
நெக்குருகி வாழ்த்துமென் நெஞ்சு.

புலவர் பி. திருஞானசம்பந்தம் — மருதூர், (சமயபுரம் வழி) திருச்சி.

மலரே! மலரே! மகிழ்வதேன் இன்றே?
மலராய்ப் பிறந்தாய் மணமும் – கலந்தே
சிரபுரம் மீனுட்சி சுந்தரன் தாளைநீ
பொருந்தலால் கொண்டனையோ பேறு?

புலவர் செ. தமிழரசன்

சமுத்திரம்,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

அன்னை தமிழை அரியணையில் நின்றேளிர
தன்னை ஈந்த தவப்புலவ! – இந்நாளில்
பூமாலை சார்த்தி புகழாம் தமிழ்விரித்துப்
பாமாலை செய்தோம் பணிந்து.

புலவர் ம. கா. வேங்கடராமன், M. A.

திருவையாறு,
தஞ்சை மாவட்டம்.

சிந்தைக் கினியதமிழ் காத்தலால்; சீரியநல்
வந்தனைக் கேய்ந்தபெருந் தன்மையால்; வானோங்கு
செங்குன் றெனவாழ் சிறப்பால்; திருச்சிதமிழ்ச்
சங்கமும் சுந்தரனும் நேர்.

புலவர் க. தில்லைகோவிந்தன்

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம்,
உயர்நிலைப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பூந்தமிழ்த்தாய் பிள்ளையெனப் போற்றும் பெரும்புலவ!
தீந்தமிழர் வாழ்வாய்த் திகழ்மணியே! – மாந்தரெலாம்
பாட்டும் உரைநயமும் பாவல! நின் வாய்மணக்கக்
கேட்டுயர்வு பெற்றுர் கிளர்ந்து.

புலவர் மு. சொக்கப்பன்

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம்,
உயர்நிலைப்பள்ளி, திருப்பராய்த்துறை.

மீனாட்சி சுந்தரப்பேர் மேவித் தமிழுலகில்
கோனாட்சி செய்ததமிழ்க் கோவென்கோ? – வானாட்சி
காணப் புறப்படுமுன் கன்னித் தமிழரசி
மாணவணி பூண்டாள் மகிழ்ந்து.

புலவர் செ. இளங்கோவன்

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம்,
உயர்நிலைப்பள்ளி, திருப்பராய்த்துறை.

தொன்மை அழகினிமை தோயும் தமிழொப்பாய்
மென்மை மலருளங்கொள் மேலோனே! – நன்மைதரு
தேன்தமிழ்ப் பாவால் திகழும் பலநூல்கள்
வான்மழைபோல் தந்தனையால் வந்து.

திரு. ம. வீரப்பிள்ளை சன்மார்க்க சங்கத் தலைவர்,
எகிரிமங்கலம்.

சைவ நெறிசேர் தமிழ்த்தழைக்குஞ் சான்றோய்
தெய்வ நெறிதிகழும் சீராளா! – சைவநெறி
மீனாட்சி சுந்தரவுன் மென்மலர்ப்பா தத்திலென்பா
தானாட்சி பெற்றிடுமோ சாற்று.

புலவர் ப. வே. திருமாவளவன் அரசினர் உயர்பள்ளி,
சீரனூர்.

சீரார் சிரபுரத்துச் செம்மலிவர்; இப்புவியில்
பேரார்ந்த மீனாட்சி சுந்தரனார் – நேராரும்
போற்றும் நெறியாளர் நீண்டதமிழ்ச் சான்றோரை
ஏற்றுவோம் என்றும் இனிது.

பேராசிரியர் மு. சி. கேசவன், எம்.ஏ. உருமு தனலக்குமி கல்லூரி,
திருச்சி-19.

உள்ளத்தைக் கொள்ளைகொளும் நன்னூல் பலபடைத்த
பிள்ளையவர் காண்! பெற்ற பிள்ளைகளுள் – பிள்ளையெனத்
தெள்ளுதமிழ் நூல்பதித்த சாமிநா தையரைப்போல்
பிள்ளையெவர் உற்றார் இவண்.

புலவர் அ. திரவியம் புனித சூசையப்பர் கல்லூரி உயர்பள்ளி,
திருச்சி-2.

சிந்தை யிருள்பருகிச் சேர்ந்தொளிரு மீனாட்சி
சுந்தரமாஞ் செய்ய சுடரிணையாம் – வந்தித்துப்
பாமா மலர்சூடிப் பாடுவோம் பல்லாண்டு
கோமானின் கோலக் கவிக்கு.

புலவர் க. ஆறுமுகம், எம்.ஏ. புனித வளனார் கல்லூரி உயர்பள்ளி,
திருச்சி-2.

கவினூறும் காப்பியம் ஓர்இருபான் எட்டும்
புவிபோற்றும் நல்பிரபந் தம்எம் – செவியாரச்
சந்தமுடன் இன்றமிழில் நின்னைப்போல் மீனாட்சி
சுந்தர! தந்ததெவர் கூறு?

புலவர் ப. முருகேசன் பூவாளூர், லால்குடி.

தாழ்ந்த சடையும் தவளத் திருநீறும்
சூழ்ந்த புலியதளும் சூழ்அரவும் சேர்ந்தோனைப்
பூசித்த புண்ணியர் மீனாட்சி சுந்தரரை
நேசிப்பார் வாழி நெடிது.

தமிழ்நாவலர் சி. அரசப்பனார் தாயகம், உறையூர், திருச்சி-3.

கவிதைக் கடலே! கனிச்சுவையே! கண்டே!
புவிக்குள் உருவாம் புகழ்க்குன்றே! நன்மை
செவிக்குத் தருவாய் புலன்ஒன்றக் கவிதை
குவிக்கும் அருவியே வாழ்!

புலவர் ந. வாசுதேவ கிருட்டிணமூர்த்தி அரசு சையது முர்துசா உயர்பள்ளி, திருச்சி-8.

தோன்றிற் புகழொடு தோன்றுக என்றுரைத்த
சான்றோன் மொழிவழி நின்றவனே — தேன்நிகர்
காவியம் ஈந்தவனே! மீனாட்சி சுந்தரா!
தூவினேன் பூவினைநின் தாள்.

புலவர் பா. நாராயணசாமி, பி.ஏ. திருச்சி-20.

கன்னித் தமிழால் கடவுள் நெறியனைத்தும்
பொன்னி நதிபோல் பொலிவுறவே — மன்னுலகில்
தொண்டுசெய்த மன்னவனும் தூயதமிழ்ச் சுந்தரனை
வண்டமிழால் வாழ்த்துவோம் வா.

புலவர் இரா. வரதராசன், பி.ஏ. திருவானைக்கா, திருச்சி-5.

முன்னைப் பழநூல்கள் எல்லாமே கற்றதுடன்
பின்னைப் புதுநூல்கள் சொன்னவரே! — அன்னைத்
தமிழ்மொழியின் மூத்த தலைமகனே! உம்மை
அமிழ்தெனவே போற்றிடுமே பார்.

புலவர் சு. இராமசாமி

51, திருவள்ளுவர்தெரு,
திருவரங்கம், திருச்சி-6.

வண்ணத் தமிழெனும் வாடா மலராலே
பண்ணெழுகு பாமாலை பாடியே – மண்ணவர்
எண்ணில் நிலைபெற்ருய் மீனுட்சி சுந்தர!
மண்ணுலகில் நின்நாமம் வாழ்.

புலவர் இலக்குமிபாலன்

பாளையம்,
திருச்சி மாவட்டம்.

பைந்தமிழே மூச்சாய் பனிமலையின் பேரொளியாய்
அந்தமிலாத் தொண்டதனின் ஆற்றலாய் – செந்தமிழின்
கோனுட்சிக் கோமகனுய் நெஞ்சமதில் வாழ்கின்ற
மீனுட்சி சுந்தரத்தை வாழ்த்து.

புலவர் சு. பாலசுப்ரமணியன்

அரசு உயர்பள்ளி,
பெரம்பலூர்.

கன்னல் புலமையால் காவியப் பாவினுல்
தென்னர் புகழெனும் தொண்டினுல் – அன்பினுல்
முத்துத் தமிழ்த் தொண்டர் மீனுட்சி சுந்தரரை
நித்தமும் வாழ்த்துவம் யாம்.

புலவர் C. அருண்மொழி

மேலப்பழுவூர்,
திருச்சி.

செந்தமிழின் நூற்புலமை சீர்சான்ற நற்குணத்தின்
பைந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த பண்புமகன் – சொந்தமுடன்
வீசுமொளி ஆதவனும் மீனுட்சி சுந்தரரின்
பேசுமொழி எல்லாமே பாட்டு.

புலவர் துரை. இராசேந்திரன்

உறையூர்,
திருச்சி-3.

செந்தேன் வழங்கிடும் செம்மலர்போல் இன்றமிழை
விந்தையுடன் ஈந்ததனுல் மீனுட்சி – சுந்தரரே!
ஈடில்லா மாண்பதனை இந்நாடு பெற்றதுவே
பாடித் துதிப்பேன் பணிந்து.

சொ. நமசிவாயம், M.A., B.T. உருமு தனலக்குமி கல்லூரி, திருச்சி-19.

தேனூட்சி செய்திருக்கும் தீங்கவிதை ஆயிரஞ்செய்
மீனாட்சி சுந்தரர்க்கே வானூட்சி – மேதினியில்
ஒண்டமிழுக் கோர்பாகம் தந்தவனின் றன்புகழை
விண்டவரை நாளுமற வோம்.

புலவர் சி. செயராணி பூவாளூர், லால்குடி.

செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த சேயான மீனாட்சி
சுந்தரரே! வாகைதனைச் சூடியே – நந்தமிழர்
நீடியே வாழ்ந்திட நீள்நிலத்தில் செய்திட்டாய்
பாடிப் புகழ்வேன் பணிந்து.

இரா. கோபாலசாமி அருள்சோதி அச்சகம், பெரம்பலூர்.

தமிழுக்கோர் தாத்தாவைத் தந்ததமிழ்ச் சான்றோன்
அமிழ்தாம் தமிழ்வளர்த்த ஆசான் – குமிலாய
குன்றத்தே சீருடைய மீனாட்சி சுந்தரனார்
மன்றுபுகழ் ஈந்திட்ட மாண்பு.

கவிஞர் ப. திருவேங்கடம் F. 80/5, இரயில்வே காலனி, பொன்மலை, திருச்சி-4.

ஆழ்ந்தவறி வாற்றலும் ஆசு கவித்திறமும்
சூழ்ந்த பெரும்புலமைத் தோன்றலாய் – வாழ்ந்திங்கு
நூறாண்டும் ஓடியதே நுண்மாண் நுழைபுலத்தில்
யாரவர்க்கு நேரின் றியம்பு?

வீ. பஞ்சவர்ணம் திருவானைக்கா, திருச்சி-5.

செந்தமிழின் நூற்புலமைச் சீடர்தம் ஞானகுரு
செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த செல்லமகன் – சிந்தனையில்
மின்னும் அறிவொளியாம் மீனாட்சி சுந்தரரின்
பொன்னடிக் கென்கவிதைப் பூ.

சைதை. சுந்தரமூர்த்தி, M. A., B. T. F.79/4, இரயில்வே காலனி,
பொன்மலை, திருச்சி-4.

நற்கரும்பின் சாற்றினில் நாவினிக்குஞ் செங்கனிகள்
பற்பலவாய் இட்டுப் படைத்தாலும் – சொற்சுவைசேர்
மீனாட்சி சுந்தரத்தின் மேலான பாடல்கள்
தேனாய் இனிக்கும் தெளிந்து.

செ. தம்புரான் 93, பிள்ளையார்கோவில் தெரு,
வரகனேரி, திருச்சி-8.

வண்ணத் தமிழும் வளரும் சமயமும்
திண்ணமுடன் காத்த செழுஞ்சுடரே – எண்ணமெனும்
தாமரையில் வந்திருந்து தா,மறையை எந்தனுக்கு
நாமணக்கப் பாடுகின்றேன் நான்.

திரு. ப. மூக்கப்பிள்ளை தலைவர், மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டம்,
நடுத்தெரு, வரகனேரி.

சித்தாந்தத் தேனைத் தெளிவாக்க நூல்படைத்து
வித்தகத்தைக் கொண்டதமிழ் வேந்தனே! – நித்தம்
சமயம் வளர்த்துத் தமிழ்காத்த மேன்மைக்(கு)
இமயமும் ஆகுமோ ஈடு.

மாமுனிதாசன் புனித சூசையப்பர் உயர்பள்ளி,
திருச்சி-2.

கல்விக் கரைகண்டோன்! கம்பன் நிகர்புலவன்
வெல்லற் கருஞ்சொல்லன்! விஞ்சுபுகழ் – நல்லாசான்
மீனாட்சி சுந்தரன் மின்னார் தமிழ்வானின்
மீனாட்சி சுந்திரனும் மெய்.

ம. இராமசாமி அரசினர் உயர்பள்ளி,
பெரம்பலூர்.

கல்லானைக் கற்பிக்கும் நல்லானை நாவூறும்
சொல்லானை மீனாட்சி சுந்தரனை – பல்கலைதேர்
வல்லானை வார்த்தெடுத்த மெய்யானை தாய்மொழிக்கா
எல்லாமும் செய்வானை ஏத்து.

ப. சக்திவேலன்

கொட்டப்பட்டு,
திருச்சி-4.

கன்றின்வாய் பால்வழியும் கானகத்துப் பூச்சுவைக்கும்
வண்டின்வாய் தேன்வழியும் வார்குழலே! – குன்றில்
பொழிந்துவரும் நீர்போலப் பூந்தமிழின் பாத்தேன்
வழிந்துவரும் வாய்பிள்ளை வாய்.

திரு. ப. ஆறுமுகம், எம். ஏ:

தூய சூசையப்பர் கல்லூரி,
திருச்சி-2.

ஆரா அமுதம் அனைய தமிழ்வளர்த்த
பேரா சிரியர் பெருமானைச் – சீராரும்
தேனுட்சி செய்மொழிசேர் மீனுட்சி சுந்தரனை
நீநாளும் நெஞ்சே நினை.

புலவர் இசிதோர் சாந்தி

புனிதச் சிலுவை உயர்பள்ளி,
திருச்சி-2.

புண்ணியநாள் யாமெல்லாம் போற்றுநாள் செந்தமிழ்த்தாய்
எண்ணியெதிர் பார்க்கும் இனியநாள் – மண்ணுலகில்
மேவுமுயர் மீனுட்சி சுந்தரவேள் என்னும்
நாவலர்கோன் தோன்றியநல் நாள்.

இரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்

தலைவர், தமிழ்ச்சங்கம்,
திருச்சி-8.

மகாவித்வான் மீனுட்சி சுந்தரனுர் வாழ்க
மாமேதை தந்தகவி சந்ததமும் வாழ்க.
பாட்டாலும் உரையாலும் நூற்றுண்டு விழாவில்
பணிசெய்த பண்பாளர் பல்லாண்டு வாழ்க.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

பதிவு எண் : S. 24/56

மேலரண்சாலை—திருச்சிராப்பள்ளி-620 008.

ஆட்சிக் குழு

இரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்	– தலைவர்
ந. சுப்பிரமணியன் செட்டியார்	– துணைத்தலைவர்
சா. பெரியசாமி	– அமைச்சர்
அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்	– துணை அமைச்சர்
ரம்போலா மாஸ்கரேனஸ்	– துணை அமைச்சர்
பொ. மாணிக்கவாசகம்	– துணை அமைச்சர்
மா. மாணிக்கம்.	– துணை அமைச்சர்
ஆவி. க. ஆவிச்சி செட்டியார்	– பொருளாளர்

ஸ்ரீ ஷண்முகா பிரஸ், திருச்சி-8. போன்: 5064